# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1641/43 - 2010 පෙබරවාරි 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.02.18

*1641/43 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1978 ஆம் ஆண்டு சட்ட இலக்கம் 41 இன் பிரிவு 3 இற்கு அமைய பிரகடனப்படுத்தப்பட்டது

*1978 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட இல. 41 பகுதி 3 இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு நகர மற்றும் புனிதப்பகுதி அமைச்சராகிய தினேஸ் சந்திரா ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான் இவ்வட்டவணை நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளைக் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய"*
*பத்தரமுல்லை,*
*2010, பெப்புருவரி 05.*

**அட்டவணை**

*பிற்றிகலை நகர அபிவிருத்திப் பகுதி*

*நிரல் I*

*தென் மாகாணம், காலி மாவட்டத்தில் உள்ள நியங்கம பிரதேச சபைப் பகுதியின் கீழ் உள்ள கிராம சேவகர் பிரிவு பிற்றிகலை இல. 30, கராவுவ இல. 30D மற்றும் கி.சே.பி. களுஆராச்சிகொடை இல30E ஆகியவை மற்றும் எல்பிட்டியா பிரதேச சபைப்பகுதியின் கீழ் உள்ள கி.சே.பி. மத்திவிலியா (பகுதி), இல. 30A, கி.சே.பி. இந்டிபலே கொடை (பகுதி) இல 30B, கி.சே.பி. டெல்போன (பகுதி) இல. 30C, கி. சே. பி. டிக்ஹேனா (பகுதி) இல. 31C, மற்றும் கி.சே.பி. ஹிம்புத்துகொடை (பகுதி) இல. 31D என்பன எல்லைகளாலும் வரையறைகளாலும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டுள்ளன.*

*நிரல் II*

**வடக்கு :**

*பென்தோட்டை ஆற்றின் மத்திய கோடும் பிற்றியகலை வடக்கு வீதியின் மத்திய கோடும் ஒன்றை ஒன்று சந்திக்கும் புள்ளியிலிருந்து பென்தோட்டை ஆற்றின் தெற்கு எல்லையோரமாகக் கிழக்காகக் கீறப்பட்ட கோடானது களுஆராச்சி கொடை கி.சே.பி. இல. 30E இன் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகளை அடையும் வரை, வரையப்படும்.*

**கிழக்கு :**

*இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து பென்தோட்டை ஆற்றின் மேற்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது தெற்காக மாஓ-எல (பட்டியா-எல) வின் மத்திய கோட்டினை சந்திக்கும் வரை வரையப்படும்*

*நிரல் I*

*நிரல் II*

**தெற்கு :**

இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கொடஅமுன வீதியின் மத்திய கோட்டு ஓரமாக மேற்காகக் கீறப்பட்ட கோடானது தலகஸ்வல பிற்றிகலை பிரதான வீதியின் சோமபால மாவத்தையை சந்திக்கும் புள்ளியிலிருந்து சோமபால மாவத்தையின் மத்திய கோட்டோரமாக மேற்காகக் கீறப்பட்ட கோடானது மஹிந்தராம கோவிலுக்கும் S. D. கருணதாசாவின் காணிக்கும் அருகாமையில் அமைந்துள்ள காணியிலுள்ள 12 அடி அகலத்தைக் கொண்ட வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும் வரை பின்பு, இக்கோடானது தொடர்ந்து 12 அடி அகல வீதியின் மத்திய கோட்டோரமாக S. D. இந்திராணியின் காணிக்கு அருகமைந்து D. 4.0 ஒடுங்கிய வீதியின் மத்திய கோட்டோரமாக வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது பிற்றிகலை-எல்பிட்டியா பிரதான வீதியின் நடுக்கோட்டைச் சந்திக்கும் வரை பின்பு, மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாக வட மேற்காகக் கீறப்பட்ட கோடானது ஓலுவில வீதியின் நடுக்கோட்டை சந்திக்கும் வரை பின்பு ஓலுவில வீதியின் நடுக்கோட்டோரமாக வடமேற்காகக் கீறப்பட்ட கோடானது ஹிம்புத்தான வீதியின் நடுக்கோட்டினைச் சந்திக்கும் வரை பின்பு, ஹிம்புத்தான வீதியின் மத்திய கோட்டோரமாக மேற்காகக் கீறப்பட்ட கோடானது பொல்வத்தைச் சந்தியினை அடையும் வரை, வரையப்படும்.

**மேற்கு :**

இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது ஸ்ரீ பியரத்தினா ஹிமி மாவத்தையின் நடுக்கோட் டோரமாக சுதார எலவின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, சுதார- எலவின் நடுக்கோட்டின் ஓரமாக வடமேற்கு மற்றும் வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது தொடக்க புள்ளியினை அடையும் வரை, வரையப்படும்.

*3- 157*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.